27.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மூணாறுதலைப்பு அணை பாசனத்துக்காக திறப்பு

நீடாமங்கலம் அருகேயுள்ள மூணாறுதலைப்புக்கு கல்லணை நீர் வந்தடைந்தது. அதிலிருந்து பாசனத்துக்காக திங்கள்கிழமை காலை நீர் திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணை திறக்கப்பட்டு கல்லணைக்கு வந்த நீரானது நீடாமங்கலம் அருகேயுள்ள மூணாறு தலைப்புக்கு திங்கள்கிழமை காலை வந்தடைந்தது. விநாடிக்கு 1,504 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மூணாறு தலைப்பு அணையிலிருந்து நீர் திங்கள்கிழமை காலை 6 மணிக்கு பாசனத்துக்காக திறக்கப்பட்டது. இதன்படி கோரையாற்றில் 1,203 கன அடியும், பாமணியாற்றில் 301 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கோரையாறு தண்ணீர் மூலம் 1,20,957 ஏக்கர் நிலமும், பாமணியாற்று தண்ணீர் மூலம் 38,357 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும். வெண்ணாற்றில் தண்ணீர் திறந்து விடப்படவில்லை. சம்பா சாகுபடிக்கு இந்த நீரானது பயன்படும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

### தென்னையில் கருந்தலை புழுவைக் கட்டுப்படுத்தும் முறைகள்

தென்னையில் கருந்தலை புழுக்களால் பாதிப்பு ஏற்படுகிறது. கருந்தலை புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து பார்ப்போம். **பூச்சியின் குணாதிசயங்கள்:** இந்த வகை புழு, பச்சை கலந்த பழுப்பு நிற உடல்களைக் கொண்டிருக்கும். தலை கருப்பாகவும், உடல் மீது பழுப்பு நிறக் கோடுகளும் இருக்கும். தென்னை இலைத் திசுக்களில் உள்ள பச்சையத்தைச் சாப்பிடுவதால், தென்னை மரம் காய்ந்ததுபோல் தோற்றமளிக்கும். தடுப்பு முறைகள்: கருந்தலைப் புழு தாக்குதலுக்கு உள்ளான ஓலைகள்,

மட்டைகளை அப்புறப்படுத்தி தீயிட்டு எரிக்க வேண்டும். ஒட்டுண்ணிகளான பேராசியரோலா 3,000 எண்கள் அல்லது பிரகான் பிரேவிகார்னிஸ் 4,500 எண்களில் ஹெக்டேர் பரப்பளவில் மரத்தின் குருத்துப் பகுதியில் இரண்டு முறை தாக்குதலின் அறிகுறிகள் குறையும் வரை இட்டுக் கட்டுப்படுத்தலாம்.

ஒட்டுண்ணியானது தென்னை ஆராய்ச்சி நிலையம்-ஆளியாறில் கிடைக்கிறது. வளரும் மரங்களில் கருந்தலைப் புழுக்களைக் கட்டுப்படுத்த டைகுளோரோவாஸ் 2 மில்லியை 2 லிட்டர் தண்ணீரில் கலந்து தாக்குதல் அதிகம் உள்ள மர ஓலைகளின் கீழ் பகுதியில் நனையும்படி தெளிக்க வேண்டும்.

காய்ப்புக்கு வந்த மரங்களில் தாக்குதலைக் கட்டுப்படுத்த மரத்தின் அடிபாகத்திலிருந்து 1.5 மீட்டர் உயரத்தில் மரத்தின் தண்டு பாகத்தில் சாய்வாகத் துளையிட்டு துளையில் மோனோகுரோடோபாஸ்-36 டபிள்யூ எஸ் சி-5 மில்லி மருந்தை ஊற்றியபின் தாமிரக் கரைசல் கலந்து களிமண்ணால் மூடிவிட வேண்டும். வேர் மூலம் கட்டுப்படுத்துவதாக இருந்தால், நன்கு வளர்ந்த வேரை சாய்வாக வெட்டிய பின் இதை பாலிதீன் பையில் மோனோகுரோடோபாஸ் 36, டபிள்யூ எஸ் சி-10 மில்லி, 10 மில்லி தண்ணீர் கலந்த கலவையில் வேரை இட்டு இறுக்கமாகக் கட்ட வேண்டும்.

மருந்து இட்ட 40 நாள்கள் வரை காய்கள் அறுவடை செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும், மருந்து இட்ட தோட்டத்தில் ஒட்டுண்ணிகளை விடக் கூடாது. இத்தகைய முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தென்னையில் கருந்தலைப் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என்றார்.

## காலநிலைக்கேற்ற நெல் ரகங்களைப் பயிரிட்டால் மகசூல் அதிகரிக்கும்

காலநிலைக்கேற்ற நெல் ரகங்களைப் பயிரிட்டால் மகசூல் அதிகரிக்கும் என்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், நீர்வள ஆதாரத் துறை, பாசன வேளாண் பயிற்சி நிலையம் ஆகியவை சார்பில் நடைபெற்ற காலநிலை மாற்றத்துக்கு உகந்த நெல் சாகுபடி முறைகள் குறித்த கருத்தரங்கில் வேளாண் பல்கலைக்கழக

விஞ்ஞானிகள் டாக்டர் லட்சுமணன், டாக்டர் ஜெயபிரகாஷ், டாக்டர் கீதாலட்சுமி ஆகியோர் பேசியதாவது:

காலநிலை மாற்றத்துக்கு ஏற்ற வகையிலான நெல் ரகங்களை சாகுபடி செய்ய நார்வே நாட்டின் நிதியுதவியுடன், கிளைமா அடாப்ட் என்ற திட்டம் காலிங்கராயன் பாசனப் பகுதியில் நெல் நடவுக்காக செயல்படுத்தப்படுகிறது. இதற்காக திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யும்போது, குறைந்த விதை நெல், செலவு குறைவு, நீர் தேவை குறைவு, ரசாயன உரம் மற்றும் பராமரிப்பு செலவு குறைவதுடன், மகசூல் அதிகரிக்கும். இதற்காக பல்வேறு விவசாய நிலங்களில் இதற்கான செயல்விளக்கம் அளிக்கிறோம். மேலும், வாட்டர் டியூட் எனப்படும் குழாய்களை விவசாய நிலங்களில் பதித்து வைப்பதன் மூலமாக நெல் பயிர்களின் வேர்ப் பகுதிக்கு வேர்களுக்கு கூடுதல் நாள்களுக்கு நீர் கிடைக்க செய்யும். நெல் சாகுபடியுடன் கூடுதல் வருவாய் பெற, மண்புழு உரம் தயாரித்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், இயற்கை உரம் தயாரிப்பு போன்றவை குறித்த பயிற்சியை விவசாயிகளுக்கு வழங்குவோம். இத்திட்டத்தில் தரமான நெல் விதைகள், உயிர் உரங்களை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றனர்.

கருத்தரங்கில் கீழ்பவானி வடிநில கோட்ட செயற்பொறியாளர் ராஜு பேசியதாவது:
தென்மேற்குப் பருவமழை கை கொடுக்காததால் பவானிசாகரில் போதிய நீர் இருப்பு இல்லை. இருப்பினும், வடகிழக்குப் பருவமழை அதிக அளவில் பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால், 7 டி.எம்.சி., நீர் இருந்தபோது அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால், அணையில் போதிய நீர் இல்லாததாலும், மாவட்ட நிர்வாகம் குடிநீர் இருப்புக்கு அணையில் உள்ள தற்போதைய நீரை ஈரோடு மாவட்டத்தில் உள்ள 35 குடிநீர்த் திட்டங்களுக்கு தினமும் 100 முதல், 150 கனஅடி வீதம் திறக்க வேண்டும் என தெரிவித்ததால் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனால் தண்ணீர் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மேலும், அணையில் இருந்து டிசம்பர் 25-ஆம் தேதி வரை தண்ணீர் திறப்பதற்கான ஆணை பெறப்பட்டுள்ளதால் அணைக்கு நீர்வரத்து அதிகமானதும் மீண்டும் விவசாயிகளுக்காக தண்ணீர் திறக்கப்படும் என்றார்.

## மாடித்தோட்டம் அமைப்பது எப்படி? வேளாண் துறை நாளை பயிற்சி

புதுச்சேரி வேளாண் துறை சார்பில், மாடித்தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

இது குறித்து புதுச்சேரி அரசு வேளாண்துறை தோட்டக்கலை கூடுதல் வேளாண் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுச்சேரி அரசு வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் நகர்ப்புற மாடித்ப் தாட்டம் அமைக்கும் திட்டத்தின் கீழ் இடு பொருள்களான செடி வளர்க்கும் பை, மண், விதைகள், நாற்றுகள், வேப்பம்புண்ணாக்கு, பூவாளி, கைத்தெளிப்பான், களை கொத்தும் கருவி ஆகியவை மானிய விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்தோட்டக்கால் புதுச்சேரி வா0 நகர் புற மக்கள் பயனடையும் வகையில் புதுச்சேரி அரசு வேளாண் துறை கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் மற்றும் புதுச்சேரி மாநில தேசியத் தோட்டக்கலை இயக்கமும் இணைந்து செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள அன்னை தெரெசா செவிலியர் கல்லுô்ரி கலந்தாய்வு கூடத்தில் வீட்டு மாடியில் காய்கறித்தோட்டம் அமைப்பது மற்றும் இயற்கை வழியில் சாகுபடி செய்யும் முறைகளைப் பற்றியும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மாடித்தோட்டம் அமைப்பதற்கான விண்ணப்பம் அளித்தவர்களும் மற்றும் மாடித்தோட்டம் அமைக்க ஆர்வமுள்ளவர்களும் கலந்துகொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட உள்ளது.

# இன்றைய வேளாண் செய்திகள்

## உலகின் மிக உயர்ந்த காளை

உலகின் மிக உயர்ந்த காளை யுவராஜ் ஹரியானாவில் உள்ளது. இதன் விலை சுமார் 9 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 9 அடி நீளம், 5 அடி 9 அங்குல அகலம் உள்ள இந்தக் காளையின் எடை 1500 கிலோ.

ஒவ்வொரு முறையும் இந்த காளையிடம் இருந்து எடுக்கப்படும் விந்தணுவை நீர்க்கச் செய்து 500 டோஸ்கள் உருவாக்குகின்றன. ஒரு டோசின் விலை 300 ரூபாய். இந்தக்காளையின் மூலமாக இதுவரை ஒன்றரை லட்சம் ஆரோக்கியமான கால்நடைகளை உருவாக்கி உள்ளனர். இக்காளையிடம் இருந்து உருவான ஒவ்வொரு பசுவும் நாள் ஒன்றுக்கு 18 முதல் 20 லிட்டர் பாலைத் தருகினறனர்.

## கடலாடி, சாயல்குடியில் ஏர் பூட்டி உழவுப்பணி

சாயல்குடி : சாயல்குடி, கடலாடி, தரைக்குடி உள்ளிட்ட கிராமங்களில் வயல்களில் ஏர்பூட்டி கலப்பை மூலம் உழுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

தானியப்பயிர்களுக்கு ஏற்ற நிலமாக விளங்கும் கரிசல் மண் பகுதியில், மிளகாய், நெல், எள், பருத்தி பயிரிடப்படுகின்றன. செம்மண் நிலங்களில் நிலக்கடலை மகசூல் ஈட்டி வருகின்றனர். தை, மாசி மாதங்களில் அறுவடைக்கு பின்னர், கோடை உழவு உழுது நிலத்தை பண்படுத்தி உள்ளனர். ஆடி மாதத்ததில் நெல் உள்ளிட்ட தானியப்பயிர்களை விதைப்பதற்காக மீண்டும் நிலங்களை உழவு செய்கின்றனர்.

பிள்ளையார்குளத்தை சேர்ந்த விவசாயி மூர்த்தி கூறுகையில், டிராக்டரில் 1 ஏக்கர் நிலத்தை 40 நிமிடத்தில் உழவு செய்ய 650 ரூபாய் ஆகிறது. நிலத்தை ஆழமாக உழவு செய்ய ஏர் பூட்டி உழுதுவருகின்றனர்.

இதனால், நிலத்தில் மழைக்காலங்களில் நீர்பிடிப்பு தன்மை கிடைக்கும்.

காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை 1 ஏக்கர் வரை உழவு செய்யலாம். இதற்கு ஆயிரம் ரூபாய் செலவாகிறது. டிராக்டர் உள்ளிட்ட இயந்திரங்கள் மூலம் உழவு செய்தாலும், ஏர்கலப்பை உழவுக்கு கிராக்கி நிலவுகிறது, என்றார்.

## முட்டை விலை 350 காசு 4 நாளில் 35 காசு சரிவு

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 350 காசாக நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில், கடந்த, நான்கு நாட்களில், 35 காசு வரை சரிந்துள்ளது.

நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்தது. அதில், முட்டை உற்பத்தி, சந்தை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 360 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, பத்து காசுகள் குறைத்து, 350 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. புரட்டாசி விரதம் துவங்கி உள்ளதாலும், வட மாநிலங்களுக்கு சப்ளை நிறுத்தப்பட்டுள்ளதாலும், முட்டை விலை, கடந்த, நான்கு நாட்களில், 35 காசு வரை சரிந்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 375, ஹைதராபாத், 345, விஜயவாடா, 363, பர்வாலா, 352, மும்பை, 390, மைசூர், 368, பெங்களூரு, 365, கோல்கட்டா, 407, டில்லி, 358 என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டைக்கோழி, ஒரு கிலோ, 77 ரூபாயில் இருந்து, 74 ரூபாயாக குறைந்தது. கறிக்கோழி ஒரு கிலோ, 64 ரூபாயில் இருந்து, 60 ரூபாயாக குறைத்து விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**ஒடிசா மாநிலத்தில் இருந்து 2,600 டன் ரேஷன் அரிசி ரயில்வே ஸ்டேஷன் வரத்து**

நாமக்கல்: நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனில், ஒடிசாவில் இருந்து வரவழைக்கப்பட்ட, 2,600 டன் ரேஷன் அரிசி, நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டது.

சேலம் - கரூர் அகல ரயில் போக்குவரத்து துவங்கியதை தொடர்ந்து, சரக்கு போக்குவரத்தும் துவங்கப்பட்டது. தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத், ஒடிசா, பீகார் போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்து, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்கான தீவனங்கள் எடுத்து வரப்படுகின்றன. அதன்படி, ரேஷன் அரிசி, பருப்பு, சர்க்கரை, கோதுமை போன்ற அத்தியாவசிய பொருட்களும், மக்கா சோளம், புண்ணாக்கு, சோயா உள்ளிட்ட கால்நடை தீவனங்களும் சரக்கு ரயில் மூலம், நாமக்கல் ஸ்டேஷனுக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து, லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கிடங்கு மற்றும் சம்பந்தப்பட்ட குடோனில் இருப்பு வைக்கப்படுகிறது. நேற்று, ஒடிசாவில் இருந்து, 40 வேகன்களில், 2,600 டன் ரேஷன் அரிசி, ரயில் மூலம், நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்தது. அவை லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டன.

தினகரன்

# இன்றைய வேளாண் செய்திகள்

## நாமக்கல்லுக்கு 2600 டன் ரேஷன் அரிசி வருகை

நாமக்கல்: நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு நேற்று 2600 டன் ரேஷன் அரிசி வந்தது. நாமக்கல் மாவட்டத்தில் 1,200க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள் மூலம் அத்தியாவசிய பொருட்களான அரிசி, சர்க்கரை, பருப்பு ஆகியவை விநியோகிக்கப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்திற்கு ஒடிசாவில் இருந்தும் ரேஷன் அரிசி கொண்டு வருவது வழக்கம். இந்நிலையில், நேற்று காலை ஒடிசாவில் இருந்து 2600 டன் ரேஷன் அரிசி சரக்கு ரயில் மூலம் கொண்டு வரப்பட்டது.

40 வேகன்களில் வந்த அரிசி மூட்டைகளை இறக்கி, திருச்சி ரோட்டில் உள்ள குடோனிற்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது.

## பயறு வகை சாகுபடி பயிற்சி

சேந்தமங்கலம்: புதுச்சத்திரம் ஒன்றியம் தாத்தையங்கார்பட்டி கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறுவகை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புதுச்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குனர் வரதராஜீ, பயறுவகையின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான தொழில் நுட்பம் குறித்து பேசினார். வேளாண் அலுவலர் ஜெயமாலா, பூச்சி நோய் தாக்குதல், இயற்கை முறையில் பூச்சி விரட்டுதல் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார்.

## தோட்டக்கலை துறை சார்பில் மாவட்டத்திற்கு ரூ.2.29 கோடி மானியமாக நிதி ஒதுக்கீடு

ஈரோடு, : தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக தேசிய தோட்டக்கலை இயக்கம் 2016-17ம்ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயன் பெறும் வகையில் மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் ரூ. 2 கோடியே 29 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது. தோட்டக்கலை பயிர்களில் வீரிய ஒட்டு ரக காய்கறிகள், மா, கொய்யா, திசுவாழை, பப்பாளி

ஆகியவற்றிற்கு புதிய தோட்டம் அமைக்க ரூ.32 லட்சத்து 34 ஆயிரத்து 800 செலவில் 145 எக்டர் பரப்பிற்கு 40 சதவீத மானியமும், பப்பாளி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பயிர்களு–்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

பசுமை குடில்கள், நிழல்வலை குடில்கள், பறவை தடுப்பு வலை, நிலப்போர்வை போன்ற தொழில் நுட்ப சாகுபடிக்கு 50 சதவீத மானியத்திலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பண்ணை இயந்திரங்களான மினி டிராக்டர்கள், பவர் டில்லர்கள், தெளிப்பான்கள் 25 முதல் 50 சதவீத மானியத்தில் வழங்க ரூ.12.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தோட்டக்கலை பண்ணை பணிகளை தொய்வின்றி உரிய பருவத்தில் மேற்கொள்வதற்கு ஏதுவாக பண்ணை சாகுபடிக்கு தேவையான பொருட்கள் 50 சதவீத மானியத்தில் 1,300 விவசாயிகளுக்கு ரூ.36 லட்சம் மதிப்பீட்டில் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப சாகுபடி முறையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ரூ.8.83 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 40 சதவீத மானியத்தில் தேனீ வளர்ப்பு, 50 சதவீத மானியத்தில் பழைய தோட்டங்கள் புனரமைத்தல், மண்புழு உர உற்பத்தி மற்றும் மண்புழு உரபடுகை அமைப்பதற்காக ரூ.16.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் இதுதொடர்பான விபரங்களுக்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்களை அணுக தோட்டக்கலைத்துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## சேவூரில் ரூ.75 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், : அவிநாசி அருகே சேவூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று ரூ.75 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் குவிண்டாலுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,820 முதல் ரூ.5,970 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.4,450 முதல் ரூ.4,900 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,210 முதல் ரூ.4,400 வரையிலும், பச்சை நிலக்கடலை ரூ.3,000 முதல் ரூ.3,300 வரையிலும் ஏலம் கோரினர். மொத்தம் ரூ.75 லட்சத்துக்கு ஏல வர்த்தகம் நடந்தது. இதில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர்,

நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 25 வியாபாரிகளும், 551 விவசாயிகளும் பங்கேற்றனர்.

## ஆடுதுறை நெல்ஆராய்ச்சி நிலையத்தில் வானிலை சார்ந்த வேளாண்மை சாகுபடி விழிப்புணர்வு கூட்டம்

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் அடுத்த ஆடுதுறையில் தமிழ்நாடு நெல்ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது. இங்கு மத்தியகால வானிலை முன்னறிவிப்பு மற்றும் வானிலை சார்ந்த வேளாண்மை சாகுபடி பற்றிய விவசாயிகள் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் 200க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி தலைமை வகித்து பேசும்போது, மத்திய கால வானிலை முன்னறிவிப்பின் முக்கியத்துவத்தையும் வானிலை சார்ந்த வேளாண் தொழில் நுட்பங்களான விதைப்பு மற்றும் நடவு, உரம், களை மற்றும் நீர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பில் செய்யக்கூடிய சாகுபடி முறைகளை பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறினார். உழவியல்துறை தலைவர் சுப்பிரமணியன் பேசுகையில், வானிலையில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு மழை வருவதற்கான அறிகுறிகளை கண்டறிய முன்னோர்கள் கையாண்ட முறைகளை பற்றியும், தற்போதைய கால கட்டத்தில் அறிவியல் வளர்ச்சியினால் வானிலையில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் முறையினை பற்றியும் எடுத்துரைத்து விளக்கினார்.

உழவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் செந்தில்குமார், மத்தியகால வானிலை முன்னறிவிப்பானது அடுத்து வரும் 5 நாட்களுக்கு வானிலையில் நிலவும், மேகமூட்டம், மழை, காற்றின் வேகம் மற்றும் திசை அதிகப்பட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை ஆகிய காரணிகளை முன்னறிவிப்பு செய்வதுடன் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடையும் நோக்கில் பிரதான பயிர்களுகக்கு வேளாண் ஆலோசனைகள் தயார் செய்து ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்டு வரும் முறை பற்றியும் தெரிவித்தார்.

மேலும் இந்திய வானிலை மையம் நிறுவியுள்ள கிஷான் போர்டல்

இணையதளத்தில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் ஏழத்தாழ ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் தங்களது கைப்பேசி எண்களை பதிவு செய்து வானிலை சார்ந்த வேளாண் சாகுபடி முறைகளை குறுஞ்செய்திகளாக பெற்று வருவதை பற்றியும் எடுத்துரைத்தார்.

**சம்பாசாகுடிக்கு மானிய விலையில் விதைநெல் வினியோகம்**

திருவையாறு, : திருவையாறு வேளாண் வட்டாரத்தில் சம்பா சாகுபடிக்கு தேவையான விதைநெல்கள் வினியோகம் செய்யப்படுகிறது என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.தமிழக அரசு கல்லணையில் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்காக சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட்டுள்ளது. விவசாயிகளுக்கு இது மகிழ்ச்சியான செய்தியாகும். திருவையாறு வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் சம்பாசாகுபடிக்கு தேவையான விதை நெல்கள் சி.ஆர்.1009, கோ.ஆர்.50, சுவர்ணா சப், ஏடிடி.46 ஆகிய ரக விதை நெல்கள் திருவையாறு, மருவூர், மேலத்திருப்புந்துருத்தி, மற்றும் மன்னார்சமுத்திரம் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் நெல் விதைகள் சம்பா தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.10 மானியமும், என்எப்எஸ்எம் திட்டத்தின் கீழ் 10 வருடத்திற்குட்பட்ட ரகங்களுக்கு (கோ.ஆர்.50, சுவர்ணா சப் ஆகியவற்றிற்கு மட்டும்) கிலோவுக்கு ரூ.10 மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி மானியத்தில் நெல் விதைகள் வாங்கி பயன்பெறலாம் என வேளாண் உதவி இயக்குநர் மீனாட்சிசுந்தரம் தெரிவித்துள்ளார். கும்பகோணம்,: கும்பகோணம் அருகே கார்த்திக் வித்யாலயா பள்ளியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கார்த்திக் வித்யாலயா மெட்ரிக் பள்ளி மற்றும் கும்பகோணம் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் சார்பில் மாவட்ட அளவிலான டெங்கு காய்ச்சல் மற்றும் டைபாய்டு தடுப்பு விழிப்புணர்வு ஓவியப்போட்டி நடைபெற்றது.

போட்டியை ரோட்டரி சங்க தலைவர் பாபுராஜ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் அம்பிகாபதி முன்னிலை வகித்தார். ஆசிரியை சுதா வரவேற்றார். பள்ளி தாளாளர் கார்த்திகேயன் ஓவியப்போட்டியை துவக்கி வைத்தார்.இதில்

கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் உள்ள 18 பள்ளிகளிலிருந்து சுமார் 700 மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.போட்டியில் 1 முதல் 3ம் வகுப்பு வரை கொசுப்முட்டை, கொசுபுழு பற்றியும், 4 மற்றும் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்கள் ஓவியம் வரைதல், 6 முதல் 8ம் வகுப்பு வரை டெங்கு காய்ச்சல் ஏடிஎஸ் கொசு பற்றியும், 9 முதல் 12ம் வகுப்பு வரை கொசு உற்பத்தி தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஓவியப் போட்டிகள் நடைபெற்றது.

போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் அந்தந்த பள்ளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. கும்பகோணம், : உள்ளாட்சித் தேர்தல் நேர்மையாகவும், உண்மையாகவும் நடைபெற தமிழக கவர்னர் தலையிட திமுக மாவட்ட செயலாளர் சு.கல்யாணசுந்தரம் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நடைபெற உள்ள 2016 உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், ஊராட்சி தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களின் இட ஒதுக்கீடு தொகுதி விபரம் குறித்து மாநில தேர்தல் ஆணையம், மாவட்ட நிர்வாகம், ஒன்றிய, நகராட்சி, பேரூராட்சி அதிகாரிகள் இதுவரை முறையாக அதிகார பூர்வமான அறிவிப்பை மக்களுக்கு தேர்தல் ஒதுக்கீடு புள்ளி விபரங்கள் வழங்கப்படவில்லை. எந்த துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டாலும் முறையான தேர்தல் தகவல்கள் தர மறுக்கின்றனர்.

ஆரம்பம் முதலே உள்ளாட்சி தேர்தல் தொடர்பான தகவல்களை தேர்தல் ஆணையம் மூடு மந்திரமாக வைத்து உள்ளது. வெளிப்படையான தேர்தல் பணி தொடங்கப்படவில்லை. தேர்தல் ஆணையம் என்பது ஆளுங்கட்சிக்கு துணையாக உள்ளது. எனவே தமிழக கவர்னர் உடனடியாக தலையிட்டு உள்ளாட்சி தேர்தலை நேர்மையாகவும், உண்மையாகவும் நடத்திட வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## கால்நடை பெருக்கு பண்ணையில் ஜெர்சி மாடுகள் 4ம்தேதி ஏலம்

ஒரத்தநாடு: தஞ்சை மாவட்ட கலெக்டர் அண்ணாதுரை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஒரத்தநாடு அருகே உள்ள கால்நடை பண்ணையில் ஜெர்சி, எருமை உள்ளிட்ட 7 மாடுகள் ஏலம் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் டெபாசிட் தொகையாக ரூ.25ஆயிரத்திற்கான காசோலை பாரத ஸ்டேட் வங்கியில் மூலம் டெபுட்டி டைரக்டர், இ.சி.பி.எப், இ.கே.டி என்ற பெயருக்கு வங்கியில் காசோலை மற்றும் ரேஷன் கார்டு, ஆதார் கார்டு ஆகியவற்றை கொடுத்து 3ம் தேதி 12 மணிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். 3ம் தேதிக்குள் முறையாக வங்கியின் மூலம் உரிய ஆவணத்துடன் வருபவர்கள் மட்டுமே 4ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலம் எடுத்தவர் ஏலம் எடுத்தவுடன் ஏலம் கோரிய முழுத்தொகையையும் ரொக்கமாக செலுத்த வேண்டும். தவறினால் அவரால் செலுத்தப்பட்ட காசோலைத் தொகையை அவர்கள் இழக்க நேரிடும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## 6,700 கால்நடைக்கு கோமாரி தடுப்பூசி

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் குன்னூர், குரும்பல், மணலி, பிச்சன்கோட்டகம், மேலமருதூர், பனையூர், ஆண்டங்கரை, கீராலத்தூர், கட்டிமேடு, வேலூர், பாமணி, சேகல்மடபபுரம், தேசிங்குராஜபுரம், கொருக்கை ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புதுறை மற்றும் திருத்துறைபூண்டி ரோட்டரி சங்கம் சார்பில் 11வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

முகாம் நிறைவடைந்தது. கால்நடை மருத்துவர் ராமலிங்கம் தலைமை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர்கள் காவியா, சுரேந்தர், விஸ்வேந்தர் ஆகியோர் கொண்ட மருத்துவக்குழுவினர் 6,700 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். ரோட்டரி சங்க தலைவர் முத்துசாமி மற்றும் பலர் பங்கேற்றனர்.

## கோரையாறு தலைப்பு அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு

நீடாமங்கலம் : நீடாமங்கலம் அருகில் உள்ள கோரையாறு தலைப்பு அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. மேட்டூர் அணையிலிருந்து கடந்த 20ம் தேதி விவசாயத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து கடந்த 24ம் தேதி கல்லணையிலிருந்து பெரிய வெண்ணாற்றில் 3,600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அந்த நீர் தஞ்சாவூர் அருகில் உள்ள தென்பெரம்பூர் வந்து அங்கிருந்து பெரிய வெண்ணாற்றில் 2,050 கனஅடி திறக்கப்பட்டது.

அந்த தண்ணீர் நேற்று காலை நீடாமங்கலம் அருகில் உள்ள கோரையாறு தலைப்புக்கு வந்தது. இங்கு சிறிய வெண்ணாறு, பாமனியாறு, கோரையாறு என மூன்று ஆறுகள் பிரிகிறது. இதில் சிறிய வெண்ணாற்றில் கொரடாச்சேரி அருகில் பணிகள் நடப்பதால் நேற்று அந்த ஆற்றில் தண்ணீர் திறக்கவில்லை. நேற்று காலை 7 மணி நிலவரபடி கோரையாற்றில் 716 கன அடி, 8 மணிக்கு 902 கன அடி, 10 மணிக்கு 1,203 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல் பாமனியாற்றில் 7 மணி நிலவரபடி 301 கன அடி, 8 மணிக்கு 301, 10 மணிக்கு 301 கனஅடி தண்ணீரை நேற்று பொதுப்பணி துறையினர் திறந்து வைத்தனர். மேலும் தண்ணீர் வருவதையொட்டி படிப்படியாக தண்ணீர் கூடுதலாக தியக்கப்படும் என்றனர்.

இந்த தண்ணீர் திறப்பால் கோரையாற்றில் 1,20,957 ஏக்கர், சிறிய வெண்ணாற்றில் 94,219 ஏக்கர், பாமனியாற்றில் 38,357 ஏக்கர் உள்ளிட்ட 2,53,533 ஏக்கர் நிலம் சம்பா சாகுபடிக்கு பயன்பெறும். இந்த தண்ணீர் விரைவில் கடைமடையை அடைய மேட்டூர் அணையிலிருந்து அதிகம் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சரிந்தது பூக்கள் விலை மல்லிகை ரூ.120க்கு விற்பனை

மதுரை: விசேஷ தினங்கள் அதிகம் இல்லாதது மற்றும் பூக்களின் வரத்து அதிகமாக உள்ளதால், விலை குறைந்து வருகிறது. மதுரை பூமார்க்கெட்டுக்கு தேனி, கம்பம், கூடலூார், திண்டுக்கல், ஓசூர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்கு வருகிறது. கடந்த சில நாட்களாக மல்லிகை, முல்லை, செவ்வந்தி பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது. தற்போது விசேஷதினங்கள் அதிகம்

இல்லாததாலும், வரத்து அதிகரித்ததாலும் பூக்களின் விலை குறைந்தே காணப்படுகிறது. ஓணம் பண்டிகைக்கு கிலோ ரூ.800க்கு விற்பனையான மல்லிகை நேற்று ரூ.120க்கு விற்பனையானது. மற்ற பூக்களில் மெட்ராஸ் மல்லி ரூ.140, முல்லை ரூ.120, கனகாம்பரம் ரூ.300, அரளி ரூ.50, பட்டன்ரோஸ் ரூ.50, சம்மங்கி ரூ.50, வாடாமல்லி ரூ.30, கேந்தி ரூ.50, அரளி ரூ.50, செவ்வந்தி ரூ.40க்கு விற்றது. புரட்டாசி மாதம் முடிந்த பின்னர் தான் மீண்டும் பூக்களின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## குமரியில் காய்கறி விலை சரிவு பீன்ஸ் ரூ.45க்கு விற்பனை

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் வடசேரி கனகமூலம் சந்தை, அப்டா மார்க்கெட்டிற்கு ஒசூர், பெங்களூரு, ஒட்டன்சத்திரம், மதுரை, நெல்லை, திருச்செந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து காய்கறிகள் வருகிறது. மேலும் குமரி மாவட்டத்தில் விளையும் காய்கறிகளும் இந்த மார்க்கெட்டிற்கு வருகிறது. ஓணம் பண்டிகை முடிந்த நிலையில் காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. ரூ.60க்கு விற்பனையான பீன்ஸ் தற்போது ரூ.45க்கு விற்பனையாகிறது. ரூ.40க்கு விற்பனையான நாட்டு கத்தரிக்காய் ரூ.30க்கு விற்பனையாகிறது. இதுபோல் அனைத்து காய்கறிகளும் கிலோவிற்கு ரூ.5 வரை குறைந்துள்ளது.

ஆப்பிள் தக்காளி ரூ.15, நாட்டு தக்காளி ரூ.20, வரிகத்தரிக்காய் ரூ.15, நாட்டு கத்தரிக்காய் ரூ.30, முட்டைகோஸ் ரூ.20, கேரட் ரூ.45, பீட்ரூட் ரூ.25, பீன்ஸ் ரூ.45, பூசணிக்காய் ரூ.12, வெள்ளரிக்காய் ரூ.15,நீளமிளகாய் ரூ.25, உருட்டு மிளகாய் ரூ.30, காலிபிளவர் ரூ.35, வெண்டைக்காய் ரூ.20, சீனி அவரை ரூ.20, இஞ்சி ரூ.90, சேனை ரூ.40, வழுதனை ரூ.25, முருங்கைக்காய் ரூ.20, புடலை ரூ.12, சின்னவெங்காயம் ரூ.20 முதல் ரூ.25, பல்லாரி ரூ.15, 20, உருளை ரூ.25க்கு விற்பனை ஆகிறது.

இது குறித்து வடசேரி கனகமூலம் சந்ைத காய்கறி மொத்த வியாபாரி ரமேஷ் கூறியதாவது: காய்கறிவரத்து சராசரியாக உள்ளது. தற்போது அனைத்து காய்கறிகளும் ரூ.5 வரை விலை குறைந்துள்ளது. ஓணத்திற்கு ரூ.10 வரை விலை உயர்ந்தது. தற்போது காய்கறிகளின் தேவைகள் குறைந்துள்ளதால் விலை குறைந்துள்ளது என்றார்.